Government of **Western Australia**
**School Curriculum and Standards Authority**

# TAMIL: BACKGROUND LANGUAGE

# ATAR course sample examination

# Recording transcript

2024/61444

Copyright © School Curriculum and Standards Authority 2024

This is the ATAR course examination in Tamil: Background Language, Section One Listening and responding.

Turn to page 3 of your Question/Answer booklet and follow the transcript while listening.

You will hear **two** texts in Tamil. Each text will be played twice. There will be a short pause between the first and second readings. After the second reading, there will be time to answer the questions.

You may make notes at any time. Your notes will not be marked. You may come back to this section at any time during the working time for this paper.

Suggested working time: 40 minutes.

Listen to the short text that is printed below. This will help you to become accustomed to the speakers' voices. There are no questions or marks associated with this text.

A: வணக்கம் துவாரகா

B: வணக்கம் மகிழன்

A: நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

B: நான் மிகவும் நன்றாக இருக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?

A: நானும் நலமாக இருக்கிறேன். அடுத்த மாதம் பாடசாலை விடுமுறைக்கு எங்கு செல்லப் போகிறீர்கள்?

B: எங்கள் குடும்பத்தினர் எல்லோரும் தமிழ்நாட்டில் உள்ள இராமநாதபுரம் என்ற இடத்திற்குச் செல்ல இருக்கிறோம்.

A: அங்கு எவற்றைப் பார்க்கத் திட்டமிட்டுள்ளீர்கள்?

B: அங்கு செல்லப் போவதாக முடிவுதான் செய்துள்ளோம். பார்க்கப் போகும் இடங்களை இன்னும் திட்டமிடவில்லை. மிக விரைவில் நாங்கள் அவற்றைத் தீர்மானிப்போம்.

Turn over page and begin Section One

## Text 1: குடும்ப வாழ்க்கைமுறை விருப்பங்கள்

**First reading**

Listen to this conversation and answer Questions 1 and 2 in **English**.

அகானா: மாறன், இன்று குடும்ப வாழ்க்கை முறைகள் பற்றி உதயா ஆசிரியர் தெளிவாகக் கற்பித்தார் அல்லவா?

மாறன்: ஆமாம். எதிர்காலத்தில் நீ எப்படிப்பட்ட குடும்ப வாழ்க்கையை அமைக்க விரும்புகிறாய் அகானா?

அகானா: நான் எனது பெற்றோரைப் போல தனிக்குடும்பமாகவே வாழ ஆசைப்படுகிறேன்.

மாறன்: எதற்காக நீயும் அவர்களைப் போலவே வாழ ஆசைப்படுகிறாய்?

அகானா: நான் தனிக்குடித்தனமாக வாழ வேண்டும் என சிறியவளாக இருக்கும் போதே விரும்பினேன். வீடு எங்கு கட்டப் போகிறேன், ஒரு குழந்தையை மட்டுமே பெற்றெடுப்பது, உறவினர்களுடன் அளவுடன் தொடர்பை வைத்திருப்பது என சில முடிவுகளையும் தற்போது எடுத்துள்ளேன்.

மாறன்: எதற்காக அவ்வாறன முடிவுகளை எடுத்தாய் அகானா?

அகானா: எனது பெற்றோர் வயதான காலத்தில் சுதந்திரமாக தனியாக வாழ்வதே அவர்களுக்கு நல்லது. எனது வாழ்க்கை பற்றி நானும் எனது கணவரும் மட்டுமே முடிவுகள் எடுக்க வேண்டும், அத்துடன் எங்கள் வருமானத்திற்கேற்ப செலவுகளைச் செய்யவும் விரும்புகிறேன்.

மாறன்: அகானா, உனது முடிவுகளுக்கு நான் மதிப்பளிக்கிறேன். இருந்தாலும் எதிர்காலத்தில் நீ தனிமையை உணரப் போகிறாயே. உன் குழந்தைகளுக்கு தாத்தா, பாட்டியின் அரவணைப்பு கிடைக்காதே அத்துடன் உறவுகளை இழந்து சமுதாயத்தில் தனியாக வாழ்வதில் மகிழ்ச்சி கிடைக்காதே.

அகானா: நீ கூறுவதும் சரிதான் மாறன். நீ எவ்வாறு வாழ ஆசைப்படுகிறாய்?

மாறன்: 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பதற்கிணங்க நான் எதிர்காலத்தில் ஒரு பெரிய வீட்டைக் கட்டி அதில் நாமும் எங்கள் பெற்றோரும் சேர்ந்து ஒரு கூட்டுக் குடும்பமாக வாழ ஆசைப்படுகிறேன். என் குழந்தைகளுக்கு எங்கள் பெற்றோரின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதம் போன்றவை கிடைக்க வேண்டும் என விரும்புகிறேன். நாம் வேலைக்குச் செல்லும் போது குழந்தைகள் அவர்களுடன் சந்தோசமாக இருப்பார்கள். புலம்பெயர் தேசத்தில் வளரும் எங்கள் குழந்தைகள், எங்கள் பெற்றோரின் மூலமாக தமிழ்ப் பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவற்றை இலகுவாக அறிந்து கடைப்பிடிப்பார்கள். எங்கள் பெற்றோர்களும் முதியோர் இல்லத்தில் வசிப்பதைவிட எங்களுடன் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

அகானா: அப்படியா மாறன்! எதிர்காலத்தில் உனது வாழ்க்கைச் செலவு அதிகமாக இருக்குமே. அத்துடன் உங்கள் பெற்றோர்களின் முடிவுகளுக்கும் விருப்பங்களுக்கும் நீங்கள் கட்டுப்பட வேண்டி இருக்குமே. சில சமயங்களில் கருத்துகள் வேறுபடின் மனவருத்தங்கள், பிரச்சினைகள் உருவாகுவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படுமல்லவா?

மாறன்: 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்ற ஔவையாரின் கருத்துப்படி ஒரு சில குறைகள் இருந்தாலும் பல நிறைவுகளும் சந்தோசங்களும் எங்களுக்குக் கிடைக்கும்.

அகானா: நீ உணர்வுபூர்வமாக கூறும்போது உனது எதிர்கால கூட்டுக் குடும்பத்தை என் கண் முன்னே காட்டியது போல இருக்கிறது.

மாறன்: ஆமாம். நன்றி அகானா. மீண்டும் நாளை வகுப்பில் சந்திப்போம்.

*(15 seconds silence)*

**Text 1**

**Second reading**

அகானா: மாறன், இன்று குடும்ப வாழ்க்கை முறைகள் பற்றி உதயா ஆசிரியர் தெளிவாகக் கற்பித்தார் அல்லவா?

மாறன்: ஆமாம். எதிர்காலத்தில் நீ எப்படிப்பட்ட குடும்ப வாழ்க்கையை அமைக்க விரும்புகிறாய் அகானா?

அகானா: நான் எனது பெற்றோரைப் போல தனிக்குடும்பமாகவே வாழ ஆசைப்படுகிறேன்.

மாறன்: எதற்காக நீயும் அவர்களைப் போலவே வாழ ஆசைப்படுகிறாய்?

அகானா: நான் தனிக்குடித்தனமாக வாழ வேண்டும் என சிறியவளாக இருக்கும் போதே விரும்பினேன். வீடு எங்கு கட்டப் போகிறேன், ஒரு குழந்தையை மட்டுமே பெற்றெடுப்பது, உறவினர்களுடன் அளவுடன் தொடர்பை வைத்திருப்பது என சில முடிவுகளையும் தற்போது எடுத்துள்ளேன்.

மாறன்: எதற்காக அவ்வாறன முடிவுகளை எடுத்தாய் அகானா?

அகானா: எனது பெற்றோர் வயதான காலத்தில் சுதந்திரமாக தனியாக வாழ்வதே அவர்களுக்கு நல்லது. எனது வாழ்க்கை பற்றி நானும் எனது கணவரும் மட்டுமே முடிவுகள் எடுக்க வேண்டும், அத்துடன் எங்கள் வருமானத்திற்கேற்ப செலவுகளைச் செய்யவும் விரும்புகிறேன்.

மாறன்: அகானா, உனது முடிவுகளுக்கு நான் மதிப்பளிக்கிறேன். இருந்தாலும் எதிர்காலத்தில் நீ தனிமையை உணரப் போகிறாயே. உன் குழந்தைகளுக்கு தாத்தா, பாட்டியின் அரவணைப்பு கிடைக்காதே அத்துடன் உறவுகளை இழந்து சமுதாயத்தில் தனியாக வாழ்வதில் மகிழ்ச்சி கிடைக்காதே.

அகானா: நீ கூறுவதும் சரிதான் மாறன். நீ எவ்வாறு வாழ ஆசைப்படுகிறாய்?

மாறன்: 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பதற்கிணங்க நான் எதிர்காலத்தில் ஒரு பெரிய வீட்டைக் கட்டி அதில் நாமும் எங்கள் பெற்றோரும் சேர்ந்து ஒரு கூட்டுக் குடும்பமாக வாழ ஆசைப்படுகிறேன். என் குழந்தைகளுக்கு எங்கள் பெற்றோரின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதம் போன்றவை கிடைக்க வேண்டும் என விரும்புகிறேன். நாம் வேலைக்குச் செல்லும் போது குழந்தைகள் அவர்களுடன் சந்தோசமாக இருப்பார்கள். புலம்பெயர் தேசத்தில் வளரும் எங்கள் குழந்தைகள், எங்கள் பெற்றோரின் மூலமாக தமிழ்ப் பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவற்றை இலகுவாக அறிந்து கடைப்பிடிப்பார்கள். எங்கள் பெற்றோர்களும் முதியோர் இல்லத்தில் வசிப்பதைவிட எங்களுடன் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

அகானா: அப்படியா மாறன்! எதிர்காலத்தில் உனது வாழ்க்கைச் செலவு அதிகமாக இருக்குமே. அத்துடன் உங்கள் பெற்றோர்களின் முடிவுகளுக்கும் விருப்பங்களுக்கும் நீங்கள் கட்டுப்பட வேண்டி இருக்குமே. சில சமயங்களில் கருத்துகள் வேறுபடின் மனவருத்தங்கள், பிரச்சினைகள் உருவாகுவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படுமல்லவா?

மாறன்: 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்ற ஔவையாரின் கருத்துப்படி ஒரு சில குறைகள் இருந்தாலும் பல நிறைவுகளும் சந்தோசங்களும் எங்களுக்குக் கிடைக்கும்.

அகானா: நீ உணர்வுபூர்வமாக கூறும்போது உனது எதிர்கால கூட்டுக் குடும்பத்தை என் கண் முன்னே காட்டியது போல இருக்கிறது.

மாறன்: ஆமாம். நன்றி அகானா. மீண்டும் நாளை வகுப்பில் சந்திப்போம்.

---

Now answer Questions 1 and 2 in **English**.

*(10 minutes silence)*

## Text 2: பாவேந்தர் பாரதிதாசனின் வாழ்க்கைப் பயணம்

**First reading**

Listen to this description and answer Question 3 in **Tamil**.

இனிய காலை வணக்கம் தமிழகரம் வானொலி நேயர்களே!

'தமிழும் கலைஞர்களும்' நிகழ்ச்சியில் பாவேந்தர் பாரதிதாசனின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது கலைப்படைப்புகள் பற்றியும் இன்று உங்களுக்குத் தொகுத்து வழங்கவுள்ளோம். தமிழ்க் கவிஞர்களில் மிகவும் புகழ் படைத்த இவரின் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர் புதுவை (Puthuvai) என்ற ஊரில், 1891 ஆம் ஆண்டு, கனகசபை முதலியார் மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியினருக்கு மகனாக பிறந்தார். தனது சிறிய வயதிலேயே தமிழ் மொழி மீது அதீத ஆர்வம் கொண்டதால் தமிழ் இலக்கியம், இலக்கணம் போன்றவற்றைத் தனது பள்ளிப் பருவத்திலேயே முறையாக கற்றுக் கொண்டார். இவர் பதினெட்டு வயதிலேயே கல்லூரியில் தனது மேற்படிப்பைப் பூர்த்தி செய்து, கலைப்பட்டத்தைப் பெற்று தமிழறிவை மேம்படுத்தினார். தொடர்ந்து அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராக பதவியேற்றார்.

பாவேந்தர் பாரதிதாசன் தனது சிறிய வயதிலேயே அழகான பல கருத்து நிறைந்த பாடல்களை எழுதும் திறன் மிக்கவராக திகழ்ந்தார். இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது அளவு கடந்த அன்பு வைத்ததால் அவரைத் தனது மனதிலே குருவாக கருதினார். கவிஞர் பாரதியாருடன் நட்பு வைத்த நாள் முதல் தனது பெயரை 'பாரதிதாசன்' என மாற்றிக் கொண்டார். அவரை நேரிற் சந்தித்து தனது தமிழ்த் திறமைக்கு அவரிடமிருந்து மிகுந்த பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார்.

இவர் தமிழ் மொழியை அளவு கடந்து நேசித்தார். இவர் எண்ணற்ற பல கலைப் படைப்புகளைத் தமிழ் மொழிக்கு வழங்கியுள்ளார். இன்றும் மக்கள் அந்தப் படைப்புகளை ஆவலுடன் வாசிக்கவும், இனிமையான பாடல்களை விரும்பிக் கேட்கவும் கூடிய வகையில் உள்ளமை தமிழராகிய நாமெல்லோரும் பெருமைப்படக் கூடிய ஒரு முக்கிய விடயமாகும். தமிழ்நாட்டில் (In Tamil Nadu) திருச்சி (Trichy) மாவட்டத்தில், இவரது பெயரில் 'பாரதிதாசன் பல்கலைக்கழகம்' என்ற பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இவர் நினைவாக தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் சிறந்த கவிஞரைத் தேர்ந்தெடுத்து 'பாரதிதாசன் விருது' என்ற பட்டமும் வழங்கி வருகிறது.

இறுதியாக, இன்றும் தமிழர்களிடையே ஒலித்துக் கொண்டிருக்கும் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற

பாரதிதாசன் எழுச்சிக்குரலுடன் இன்றைய நிகழ்ச்சியை நிறைவு செய்கிறோம். பாவேந்தர் பாரதிதாசன் போல தமிழைப் பாதுகாக்கவும் வளர்ச்சியடையச் செய்யவும் எம்மாலான முயற்சிகளைச் செய்வோம். நன்றி.

*(15 seconds silence)*

**Text 2**

**Second reading**

இனிய காலை வணக்கம் தமிழகரம் வானொலி நேயர்களே!

'தமிழும் கலைஞர்களும்' நிகழ்ச்சியில் பாவேந்தர் பாரதிதாசனின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது கலைப்படைப்புகள் பற்றியும் இன்று உங்களுக்குத் தொகுத்து வழங்கவுள்ளோம். தமிழ்க் கவிஞர்களில் மிகவும் புகழ் படைத்த இவரின் இயற்பெயர் சுப்புரத்தினம். இவர் புதுவை (Puthuvai) என்ற ஊரில், 1891 ஆம் ஆண்டு, கனகசபை முதலியார் மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியினருக்கு மகனாக பிறந்தார். தனது சிறிய வயதிலேயே தமிழ் மொழி மீது அதீத ஆர்வம் கொண்டதால் தமிழ் இலக்கியம், இலக்கணம் போன்றவற்றைத் தனது பள்ளிப் பருவத்திலேயே முறையாக கற்றுக் கொண்டார். இவர் பதினெட்டு வயதிலேயே கல்லூரியில் தனது மேற்படிப்பைப் பூர்த்தி செய்து, கலைப்பட்டத்தைப் பெற்று தமிழறிவை மேம்படுத்தினார், தொடர்ந்து அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராக பதவியேற்றார்.

பாவேந்தர் பாரதிதாசன் தனது சிறிய வயதிலேயே அழகான பல கருத்து நிறைந்த பாடல்களை எழுதும் திறன் மிக்கவராக திகழ்ந்தார். இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது அளவு கடந்த அன்பு வைத்ததால் அவரைத் தனது மனதிலே குருவாக கருதினார். கவிஞர் பாரதியாருடன் நட்பு வைத்த நாள் முதல் தனது பெயரை 'பாரதிதாசன்' என மாற்றிக் கொண்டார். அவரை நேரிற் சந்தித்து தனது தமிழ்த் திறமைக்கு அவரிடமிருந்து மிகுந்த பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார்.

இவர் தமிழ் மொழியை அளவு கடந்து நேசித்தார். இவர் எண்ணற்ற பல கலைப் படைப்புகளைத் தமிழ் மொழிக்கு வழங்கியுள்ளார். இன்றும் மக்கள் அந்தப் படைப்புகளை ஆவலுடன் வாசிக்கவும், இனிமையான பாடல்களை விரும்பிக் கேட்கவும் கூடிய வகையில் உள்ளமை தமிழராகிய நாமெல்லோரும் பெருமைப்படக் கூடிய ஒரு முக்கிய விடயமாகும். தமிழ்நாட்டில் (In Tamil Nadu) திருச்சி (Trichy) மாவட்டத்தில், இவரது பெயரில் 'பாரதிதாசன் பல்கலைக்கழகம்' என்ற பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இவர் நினைவாக தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் சிறந்த கவிஞரைத் தேர்ந்தெடுத்து 'பாரதிதாசன் விருது' என்ற பட்டமும் வழங்கி வருகிறது.

இறுதியாக, இன்றும் தமிழர்களிடையே ஒலித்துக் கொண்டிருக்கும் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற பாரதிதாசன் எழுச்சிக்குரலுடன் இன்றைய நிகழ்ச்சியை நிறைவு செய்கிறோம். பாவேந்தர் பாரதிதாசன் போல தமிழைப் பாதுகாக்கவும் வளர்ச்சியடையச் செய்யவும் எம்மாலான முயற்சிகளைச் செய்வோம். நன்றி.

---

Now answer Question 3 in **Tamil**.

*(13 minutes silence)*

This is the end of Section One.
Complete your answers and continue with the rest of the paper.

The sound equipment can now be turned off.

## ACKNOWLEDGEMENTS

**Text 2** Information from: ITSTAMIL. (2013, July). *பாரதிதாசன்*. Retrieved August, 2024, from https://www.itstamil.com/bharathidasan.html

**Copyright**
© School Curriculum and Standards Authority, 2024

This document – apart from any third-party copyright material contained in it – may be freely copied, or communicated on an intranet, for non-commercial purposes in educational institutions, provided that it is not changed and that the School Curriculum and Standards Authority (the Authority) is acknowledged as the copyright owner, and that the Authority's moral rights are not infringed.

Copying or communication for any other purpose can be done only within the terms of the *Copyright Act 1968* or with prior written permission of the Authority. Copying or communication of any third-party copyright material can be done only within the terms of the *Copyright Act 1968* or with permission of the copyright owners.

Any content in this document that has been derived from the Australian Curriculum may be used under the terms of the Creative Commons Attribution 4.0 International (CC BY) licence.

An *Acknowledgements variation* document is available on the Authority website.

*Published by the School Curriculum and Standards Authority of Western Australia*
*303 Sevenoaks Street*
*CANNINGTON WA 6107*